**Dated : 27.03.2025**

**O.S.No. 11/2023**

**DW.1 – திரு. ராமர்**

**5ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

நான் இந்த வழக்கில் எத்தனையாவது பிரதிவாதி என்றால் 1ம் பிரதிவாதி. என்னுடைய பணி உதவி பொறியாளர் ஆகும். 2 முதல் 4 பிரதிவாதிகள் எனக்கு கீழ் பணிபுரிபவரா என்றால், இல்லை எனக்கு மேல் உள்ள அதிகாரிகள். 5ம் பிரதிவாதிக்கு கொடுக்கப்பட்டுள்ள மின் இணைப்பானது விவசாய மின் இணைப்பும் கொடுக்கப்பட்டுள்ளது, வீட்டு மின் இணைப்பும் கொடுக்கப்பட்டுள்ளது. இரண்டுமே தனித்தனி எண் கொண்டவை என்றால் சரிதான். என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் 5ம் பிரதிவாதிக்கு கொடுக்கப்பட்ட மின் இணைப்பு வீட்டிற்கு தனியாகவும், நிலத்திற்கு என்று தனியாகவும் கொடுத்ததாக என்னுடைய வாக்குமூலத்திலோ, பிரமாண வாக்குமூலத்திலோ சொல்லப்படவில்லை என்றால் தவறு. மின் விபத்து நடந்தது வீட்டு மின் இணைப்பிற்கு தான் நடந்தது. இந்த சம்பவம் நிலத்தில் தான் நடந்தது என்றால் நிலத்திலேயே வீடு உள்ளது, அங்கு தான் நடந்தது. நிலத்திற்கு கொடுக்கப்பட்ட மின் இணைப்பை பற்றி நான் எந்த தகவலும் கொடுக்கவில்லை என்றால் சரிதான்.

5ம் பிரதிவாதியின் நிலத்தில் டிராக்டரை ஓட்டி சென்ற போது வாகனம் மோதி அந்த மின் கம்பி அறுந்து விழுந்ததாக தங்களிடம் யாராவது புகார் தெரிவித்தார்களா என்றால் புகார் எதுவும் கொடுக்கவில்லை, ஆனால் நாங்கள் விசாரணைக்கு சென்ற போது கண்டுபிடிக்கப்பட்டது. நான் என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் அந்த விவரங்களை சொல்லியுள்ளேனா என்றால் அதில் சொல்லவில்லை, காவல் நிலையத்தில் கொடுத்த புகாரில் சொல்லியிருக்கிறேன். காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாக நான் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியிருக்கிறேனா என்றால் சொல்லியிருக்கிறேன். காவல் நிலையத்தில் புகார் யார் கொடுத்தது என்றால் நான் தான் புகார் கொடுத்தேன். நாங்கள் கொடுத்த புகாருக்கான முதல் தகவல் அறிக்கையை தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. இதுபோன்ற புகார் எதுவும் என்னால் கொடுக்கவில்லை, வழக்கிற்காக வேண்டி நான் தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் அது தவறு.

இந்த நிகழ்வு சம்மந்தமாக சக்திவேல் என்பவர் தான் புகார் கொடுத்துள்ளார் என்றால், சக்திவேல் என்பவரும் புகார் கொடுத்துள்ளார், சாட்சி தாமே கூறுகிறார் நானும் புகார் கொடுத்துள்ளேன் என கூறுகிறார். நான் கொடுத்த

புகார் மனுவை நீதிமன்றத்தில் தாக்கல்செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் நீதிமன்றத்தில் ஆவணம் தாக்கல் செய்ததாக குறிப்பிடுகிறேன், என்ன ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் கொடுத்த புகாரின் நகலையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறேன். எங்களுடைய துறையில் தான் கனகராஜ் என்பவர் பணியாற்றி வருகிறார் என்றால் ஏற்கனவே பணியாற்றினார். அவருடைய செல் போன் எண் தெரியுமா என்றால் 98420 42221. 03.10.2022 தேதியன்று காலை 6.31 மணிக்கு 5ம் பிரதிவாதி கனகராஜிக்கு 3 முறை தகவல் கொடுத்திருக்கிறார் என்றால் அது தெரியாது. கம்பியாளருடைய செல்போன் எண். 98420 34221 என்று சொன்னால் சரிதான். அந்த எண்ணை அவர் 3 முறை தொடர்பு கொண்டு, அந்த சம்பவத்தை பற்றி தெரிவித்திருக்கிறார் என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது.

5ம் பரிதிவாதியினால் எந்தவிதமான அசம்பாவமும் ஏற்படவில்லை, என்னுடைய கவனக்குறைவின் காரணமாக தான் இந்த அசம்பாவிதம் ஏற்பட்டிருக்கிறது என்றால் அது தவறு. நான் உரிய நேரத்திற்குள் கிடைத்த தகவலின்படி சென்று என் பணியை மேற்கொண்டிருந்தால், இந்த தவறு நிகழ்ந்திருக்காது என்று சொன்னால் அவ்வாறு கூறுவது தவறு. சாட்சி தாமே கூறுகிறார் மின்மாற்றியில் உடனடியாக பியூஸ் போய்விட்டது. மேலும் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டுவிட்டது. சக்திவேல் என்பவர் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரில் நிலத்தின் உரிமையாளர் தீர்த்தகிரி என்பவர் மின்வாரியத்திற்கு தகவல் கொடுத்திருப்பதாக புகாரில் சொல்லி, அந்த விவரம் முதல் தகவல் அறிக்கையிலும் பதிந்துள்ளது என்றால் சரிதான். இந்த விபத்து எங்களுடைய கவனக்குறைவால் ஏற்பட்டதால் 1 முதல் 4 பிரதிவாதிகள் தான் இழப்பீடு கொடுக்க வேண்டும் என்றால் அது தவறு. 5ம் பிரதிவாதியின் மீது எந்தவித தவறும் இல்லாத காரணத்தினால் நாங்கள் தான் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர்கள் என்றால் சரியல்ல. 5ம் பிரதிவாதியை பொருத்து வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

Taken down by me in open Court interpreted/read to the witness and acknowledged by him/her to be correct.

LATHA V R Digitally signed by LATHA V R

Principal District Judge,
Krishnagiri.